இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 312 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 09 – செவ்வாய்க்கிழமை 23 ஜூன் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 312 : Thiruvalluvar Year - 2057 - Aani 09 - Tuesday 23 June 2026 - Madurai 8 Pages ₹ 5.00

## திருவள்ளூர் அருகே அமோனியா வாயு கசிவு விபத்து:

# உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் வழங்குக!

## சட்டப்பேரவையில் தி.மு.க. கோரிக்கை!

**சென்னை, ஜூன் 23 -**

**திருவள்ளூர் அருகே அமோனியா வாயு கசிவு விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா பத்து லட்சம் ரூபாய் நிதி வழங்க வேண்டுமென்று சட்டப்பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு வலியுறுத்தினார்.**

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த கன்னிகைப்பேர் கிராமத்தில் இயங்கி வந்த தனியார் கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையில் எதிர்பாராத விதமாக அம்மோனியா நச்சு வாயு கசிந்தது. இந்த விபத்தில் 70க்கும் அதிகமானோர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதில் இரண்டு பேர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்த நிலையில், மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 11 பேரில் இளம் பெண் ஒருவர் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேபோல் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 11 பேரில் இளம் பெண் ஒருவரும் நேற்று காலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலும், பெரியபாளையம் அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 2 பேர் இன்று காலை உயிரிழந்தனர். இதனையடுத்து அம்மோனியா வாயு கசிவு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் அனைவரும் ஒடிசா, அசாம், ஜார்க்கண்ட் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இதனிடையே, அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்ட ஆலையின் மேலாளர் மற்றும் மேற்பார்வையாளர் உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆலையின் பாதுகாப்பு விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்பட்டதா மற்றும் அம்மோனியா வாயு குழாய்களில் ஏற்பட்ட பழுது குறித்தும் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சட்டப்பேரவையில் நேரலை நிறுத்தம்! கூச்சல் குழப்பம்!

திருவள்ளூர் அருகே நிகழ்ந்த அமோனியா கசிவு விவகாரத்தை சட்டப்பேரவையில் பேச எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது நேரலை நிறுத்தப் பட்டதால், கூச்சல், குழப்பம் நிலவியது.

தமிழ்நாடு சட்டப்பேரவை கூடியதும் அமோனியா கசிவு விவகாரத்தை தி.மு.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எழுப்பின. ஆனால் இந்த விவகாரம் குறித்து பேச சபாநாயகர் அனுமதி மறுத்து விட்டார். அமோனியா கசிவு விவகாரம் குறித்து 110 வது விதியின் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பர்வேஸ் அறிக்கை வாசித்தார்.

அமோனியா கசிவால் பாதிக்கப்பட்ட 74 பேர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். 110 வது விதியின் கீழ் அமைச்சர் படித்த அறிக்கையில் முக்கிய அறிவிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த விவகாரம் குறித்து பேச எதிர்க்கட்சிகளுக்கு சபாநாயகர் வாய்ப்பு தரவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது சட்டப்பேரவையில் நேரலை நிறுத்தப் பட்டதால், கூச்சல், குழப்பம் நிலவியது.

இந்நிலையில் திருவள்ளூர் அருகே நிகழ்ந்த அமோனியா கசிவு விவகாரத்தை சட்டப்பேரவையில் பேசிய திமுக கொறடா எ.வ.வேலு, அமோனியா கசிவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் ஆதித் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் தலைமையில் அக்கட்சியினர் சந்தித்துப் பேசினர்.

## தூய்மைப் பணியாளர்கள்

# த.வெ.க. அரசுக்கு எதிராகப் போராட்டம்!

## தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது!

*நெல்லை, ஜூன் 23 -*

*தூய்மைப் பணிகளை தனியார்மயமாக்க எதிர்ப்புத் தெரிவித்து, நெல்லை, மதுரை ஈரோடு உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள், த.வெ.க அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*தமிழ்நாட்டில் நெல்லை, மதுரை, ஈரோடு உள்ளிட்ட 12 மாநகராட்சிகளில் தூய்மை பணிகளை தனியார் வசம் ஒப்படைக்க த.வெ.க. அரசு முடிவெடுத்து டெண்டர் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்நிலையில், த.வெ.க. அரசின் இந்த முடிவை கண்டித்து நெல்லை மாநகராட்சியின் மேலப்பாளையம் மண்டல அலுவலகத்தை, தூய்மை பணியாளர்கள் முற்றுகையிட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், புதிய ஒப்பந்த முறையை ரத்து செய்ய கோரி, த.வெ.க அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.*

### ஈரோடு

*மாநகராட்சி தூய்மைப் பணிகளை தனியார்மயமாக்க எதிர்ப்பு தவெக அரசின் நடவடிக்கையைக் கண்டித்து போராட்டம் ஈரோட்டில் 1,500 தினக்கூலிப் பணியாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்!*

*மாநகராட்சி தூய்மை பணிகளை தனியார்மயமாக்க எதிர்ப்புத் தெரிவித்து, ஈரோடு மாநகராட்சிப் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் குப்பைகள் தேங்கியுள்ளதால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். தவெக அரசின் நடவடிக்கையால், 10 முதல் 15 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த வேலையை நம்பி இருக்கும் தங்களது வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.*

### புகளூர், கரூர்

*பணியைப் புறக்கணித்து தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் நகராட்சி அலுவலகம் முன் தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் கையுறை உள்ளிட்ட பாதுகாப்பு பொருட்களை வழங்க மறுப்பதாக புகார்*

*இதனிடையே கரூர் மாவட்டம் புகளூர் நகராட்சி அலுவலகம் முன் தூய்மை பணியாளர்கள் பணியைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*ஆணையர் வெங்கடாஜலபதியின் கெடுபிடி நடவடிக்கைளை கண்டித்து இந்த போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். காலை சிற்றுண்டி திட்டத்திற்கு பணியாளர்களை தாமதமாக அனுப்புவதாகவும், துப்புரவு பணியாளர்களுக்கு கையுறை உள்ளிட்ட பாதுகாப்பு பொருட்களை வழங்க மறுப்பதாகவும் தூய்மைப் பணியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.*

## காவிரியில் மேகதாது அணை:

# புதிய நடுவர் மன்றம் அமைப்பதே சிறந்த முடிவு!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**சென்னை, ஜூன் 23 -**

**மேகதாது அணை தொடர்பான அரசின் தீர்மானத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்மொழிந்த திருத்தம் தமிழ்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதில் மிக முக்கியமா னது என முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.**

சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தங்கம் தென்னரசு, சட்டப்பேரவையில், மேகதாது அணைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தனித் தீர்மா னத்தில், மேகதாது பிரச்னைக்காக புதிய நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும் என்ற திருத்தத்தை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்மொழிந்ததையும், இத்திருத்தத்தை அரசு ஏற்றுக் கொண்டதையும் சுட்டிக்காட்டினார். தமிழ்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதில் இந்த திருத்தம் மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார்.



தொடர்ந்து பேசிய தங்கம் தென்னரசு, காவிரியில் மேகதாது அணை என்பது புதிய பிரச்னை என்றும் இதற்கு புதிய நடுவர் மன்றம் அமைப்பதே சிறந்த முடிவு என்றும் கூறினார். புதிய நடுவர் மன்றம் அமைப்பதால் உச்சநீதிமன்ற ஏற்கனவே அளித்துள்ள தீர்ப்புக்கு பாதிப்பு வராது என்றும் அவர் விளக்கம் அளித்தார். மேகதாது விவகாரத்தில் மீண்டும் ஒரு விவாதத்தை உருவாக்குவது தேவையற்றது என்று குறிப்பிட்ட தங்கம் தென்னரசு, அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நிற்கிறோம் என்பதை ஒன்றிய அரசுக்கு உணர்த்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்த பிறகே திருத்தங்கள்!

கடந்த 19ம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் மேகதாது அணைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தனித் தீர்மானத்தில், மேகதாது பிரச்னைக்காக புதிய நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும் என்ற திருத்தத்தை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்மொழிந்தார். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் விஜய், தீர்மானத்தில் இதனை முறைப்படி சேர்த்துக் கொள்வதாக அறிவித்தார்.

இந்நிலையில், நேற்று அவை கூடியதும், மேகதாது அணை குறித்து பலர் பிரச்சனை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து பேசிய திமுக கொறடா எ.வ.வேலு, எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகே மேகதாது அணை தொடர்பான தீர்மானத்தில் திருத்தங்களை முன்மொழிந்ததாகத் தெரிவித்தார்.

காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட நீண்ட சட்டப்போராட்டத்தை தி.மு.க. நடத்தியதை நினைவு கூர்ந்த எ.வ. வேலு, மேகதாது விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்பதால் அதில் அரசியல் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

**தமிழ்நாடு சட்டப் பேரவையில் - நேற்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை – நாளை முரசொலியில் வெளிவரும்.**

# ‘நீட்’ எதிர்ப்பு: ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து - சென்னையில்

# கழக மாணவர் அணியினர் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!